தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 15, திருவள்ளுவர் ஆண்டு-2049

2018 மே 29, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்."

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர்ச்சியான நிழலைத் தரும் மரங்கள் நிறைந்த காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கையாய் அமைந்த கோட்டை ஆகும்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கருப்புச் சட்டை அணிந்து வந்திருந்தனர்.)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கருப்பு பேட்ஜ் அணிந்து வந்திருந்தனர்.)

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் கருப்புச் சட்டை அணிந்து வந்திருந்தார்.)

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்புகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. செ. மாதவன் அவர்கள் 3-4-2018 அன்றும், திரு. கே.கே.ஜி. முத்தையா அவர்கள் 6-4-2018 அன்றும் திரு. சா. கணேசன் அவர்கள் 13-4-2018 அன்றும், திரு. பி. அப்பாவு அவர்கள் 15-4-2018 அன்றும், திரு. ஆர். சாமி அவர்கள் 10-5-2018 அன்றும், திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள் 25-5-2018 அன்றும் மற்றும் திருமதி பூபதி மாரியப்பன் அவர்கள் 26-5-2018 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2018 மே 29

திரு. செ. மாதவன் அவர்கள் 1962 முதல் 1967 ஆம் ஆண்டு வரை திருக்கோஷ்டியூர் தொகுதியிலிருந்தும், 1967-1971, 1971-1976 மற்றும் 1985-1988 ஆகிய ஆண்டுகளில் திருப்பத்தூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1967 முதல் 1976 வரை அமைச்சராகவும், 1990-1996 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. கே.கே.ஜி. முத்தையா அவர்கள் 1957-1962, 1962-1967 ஆகிய ஆண்டுகளில் பஞ்சப்பட்டி தொகுதியிலிருந்தும், 1967-1971, 1971-1976 ஆகிய ஆண்டுகளில் கடவூர் தொகுதியிலிருந்தும் மற்றும் 1977-1980 ஆம் ஆண்டுகளில் மருங்காபுரி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சா. கணேசன் அவர்கள் 1989-1991 ஆம் ஆண்டுகளில் தியாகராய நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. பி. அப்பாவு அவர்கள் 1957-1962 ஆம் ஆண்டுகளில் செங்கல்பட்டு தொகுதியிலிருந்தும், 1962-1967 ஆம் ஆண்டுகளில் குன்னத்தூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆர். சாமி அவர்கள் 2001-2006, 2006-2011 மற்றும் 2011-2016 ஆகிய ஆண்டுகளில் மேலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் ஆண்டிமடம் தொகுதியிலிருந்தும், 2011-2016 ஆம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

திருமதி பூபதி மாரியப்பன் அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் வலங்கைமான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

2018 மே 29] [பேரவைத் தலைவர்]

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10-35

2. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

அலுவலகத்திற்குக் கட்டடம்

***3219—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், பரணிபுத்தூர் ஊராட்சியிலுள்ள மின்வாரிய பிரிவு அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS